பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 08

புதன்கிழமை
04 டிசெம்பர் 2024

கார்த்திகை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

## 60 வயது மூதாட்டியிடமும் ரி.ஐ.டி.யினர் விசாரணை!

கொழும்பு, டிசெ. 4
திருகோணமலை, மூதூர் - தோப்பூர் பகுதியைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் நவரத்தினராசா அஞ்சலிதேவி என்ற 60 வயதுடைய மூதாட்டி, பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரின் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார். என்ன காரணத்துக்காக விசாரணை

15


## 2022 மாவீரர் தினத்தையும் விசாரிக்கிறது அநுர அரசு!

யாழ்ப்பாணம், டிசெ. 4
2022ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவீரர்தின நினைவேந்தல் தொடர்பிலும் பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரிடம் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.
தமிழ்த் தேசிய

08

# சமஷ்டிப் பேச்சுகளுக்கு எப்போதும் நாம் தயார்!

### நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 4
சமஷ்டி அடிப்படையிலான – தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற – சுயாட்சிக்கான அரசியல் முறை தொடர்பில் பேசுவதற்கு நாம் எமது சமாதானக் கதவுகளைத் திறந்தே வைத்துள்ளோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

15

## அடக்குமுறைகளை கைவிடவேண்டும்!

### அநுர அரசாங்கத்துக்கு சஜித் கடும் தாக்கு



கொழும்பு, டிசெ. 4
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளை அரசாங்கம் உடனடியாகக் கைவிடவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.
அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரை மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, பயங்கர

15

## உ/த பரீட்சைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 4
சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்றுமுதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை

08

உள்ளூராட்சித் தேர்தல்

## ஏற்கனவே பெறப்பட்டுள்ள வேட்புமனுக்கள் ரத்தாகும்

கொழும்பு, டிசெ. 4
உள்ளூராட்சித் தேர்தலுக்காகப் பெறப்பட்ட வேட்பு மனுக்களை ரத்துச்செய்து, புதிதாக வேட்பு மனுக்களைக் கோருவதற்கு வழிவகுக்கும் சட்டவரைவொன்றை முன்வைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இது தொடர்

12

## கோப்பாய், உரும்பிராயில் டெங்குத்தொற்று தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோப்பாய் மற்றும் உரும்பிராய் பகுதிகளில் டெங்குத் தொற்று தீவிரம் பெற்றுள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

08

## பாம்பு தீண்டி முதியவர் பலி

யாழ்ப்பாணம், டிசெ. 4
பாம்பு தீண்டி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வடமராட்சி நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த இளையதம்பி சிவகுமார் (வயது - 66)

15

## வங்காள விரிகுடாவில் புதிய காற்றுச் சுழற்சி!

யாழ்ப்பாணம், டிசெ. 4
எதிர்வரும் 7ஆம் திகதி வங்காள விரிகுடாவில் புதிய காற்றுச் சுழற்சி உருவாக வாய்ப்புள்ளது என்றும், இது எதிர்வரும் 11ஆம் திகதி வலுவடைந்து வடக்கு, வடமேற்குத் திசைநோக்கி நகரும் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரி

08




முச்சந்தி முரளி



'இப்பிடி வயசு போனவைக்கும் விசாரணை, கைது எண்டு நல்லாத் திசைகாட்டி வழிகாட்டுது கண்டியளோ'

## இந்திய மீனவருக்கு சிறைத்தண்டனை

கொழும்பு, டிசெ. 4
நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த மாதம் 10ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 23 இந்திய மீனவர்

08

மக்கள் ம[illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மக்களால் நிராகரிக்கப்பட்டோரே இனவாதத்தைத் தூண்டுகின்றனர்

## இடமளிக்கப்படாதென பிரதமர் சாட்டை


**கொழும்பு, டிசெ. 4**

**மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள குழுக்கள், தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு மக்களைப் பிரித்து, இனவாதத்தைத் தூண்டுவதற்கு முற்படுகின்றனர். அதனைத் தோற்கடிப்பதற்குரிய அத்தனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை பாதுகாக்கப்படும். மக்கள் எமக்கு வழங்கியுள்ள பொறுப்பும் உரிய வகையில் நிறைவேற்றப்படும். முன்பிருந்த அரசியல் கலாசாரத்துக்கு பதிலாக புதியதொரு அரசியல் கலாசாரத்தையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதற்கமைய நாம் செயற்படவேண்டும். அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது, சட்டத்தின் ஆட்சி பாதுகாக்கப்படவேண்டும். இவை மக்களின் எதிர்பார்ப்புகளாகும். நாட்டு மக்கள் இனவாதத்தை நிராகரித்துள்ளனர். எனவே, எமது ஆட்சி இனவாதத்துக்கு இடமளிக்காது- என்றார். (ச-44)



# இராணுவத்தினருக்கு அநுரகுமார அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4

மக்களின் பாதுகாப்புக்காக நாடளாவிய ரீதியில் இராணுவத்தினரை வரவழைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளதாக சபாநாயகர் அசோக ரன்வல நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நான்காவது அதிகாரமாக இருந்த பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ச)

# கொக்கோ விலையுயர்வு

கொழும்பு, டிசெ.4

இந்த வருடம் ஒரு கிலோகிராம் முதலாம் தர கொக்கோவின் விலை 1,425 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

கடந்த வருடத்தில் ஒரு கிலோகிராம் முதலாம் தர கொக்கோவின் விலை 500 ரூபாவாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இனவாதத்தை ஒழிக்க புதிய சட்டங்கள் வரும்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 4

இனவாதத்தை ஒடுக்குவதற்கு தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லையெனில் புதிய சட்டங்கள் கொண்டுவந்தேனும் அதனைச் செய்துமுடிப்போம் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.


பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், இனவாதத்தைத் தூண்டுவதற்கு சில தரப்புகள் முற்படுகின்றன. இனவாதத்துக்கு இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்கு எதிராக நாம் செயற்படமாட்டோம். ஆனால் அரசியல் நோக்கங்களுக்காக இனவாதத்தை பயன்படுத்த இடமளிக்கமாட்டோம்.

பயங்கரவாத அமைப்பின் கொடி, சின்னம் உள்ளிட்டவையைப் பயன்படுத்த முடியாது. 2011 வர்த்தமானிமூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராகச் செயற்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# வெளிப்படைக் கருத்தாலேயே வடக்கு மக்கள் அநுர பக்கம்

## ராஜித தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 4

அதிகாரப்பகிர்வு தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க வெளிப்படைத் தன்மையுடன் கருத்துகளை வெளியிட்டதாலேயே அவரால் வடக்கைக் கைப்பற்றக் கூடியதாக இருந்தது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் என நான் நினைக்கவே இல்லை. எனினும், அங்கு கிடைக்கப்பெற்றுள்ள வெற்றி தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏனெனில் அவர்கள் பிராந்திய அரசியலை விடுத்து தேசிய அரசியலுக்குள் பிரவேசித்துள்ளனர்.

நானும் ரணில் விக்கிரமசிங்கவும் இனவாதிகள் அல்லர், மதவாதிகளும் கிடையாது. சம உரிமை கிடைக்கப்பெற வேண்டும் என்பதிலும் உறுதியாகவுள்ளோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்குக்குச் சென்று எவ்வித அச்சமும் இன்றி அதிகாரப்பகிர்வு தொடர்பில் கதைத்தார். 13 க்கு அப்பால் செல்லத் தயார் எனவும் உறுதியளித்தார். அதிகாரப்பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி வெளிப்படைத் தன்மையுடன் கதைத்ததால் தான் அவரால் வடக்கு மக்களின் ஆதரவைப் பெறக் கூடியதாக இருந்தது- என்றார். (ச-44)

# மாணவருக்கு 6,000 ரூபா

கொழும்பு, டிசெ, 4

'அஸ்வெசும' கொடுப்பனவு கிடைக்கும் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் விசேட காரணங்களுக்காக இல்லங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலைப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட இந்தப் பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ச-இ)

# அரிசி விலையுயர்வு

கொழும்பு, டிசெ. 4

அரிசியின் மொத்த விலையை மீண்டும் உயர்த்தியுள்ளதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் நாடளாவிய ரீதியிலுள்ள அரிசி மொத்த வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

நாட்டு அரிசி, சம்பா மற்றும் கீரி சம்பா ஆகிய அரிசிகளின் மொத்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதன்படி, ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசியின் மொத்த விலை 255 ரூபாவாகவும், சம்பா அரிசி 260 ரூபாவாகவும், கீரி சம்பா 275 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ச)

# சி.ஐ.டி.யில் பந்துல

கொழும்பு, டிசெ.4

சீனி வரி மோசடி தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு குற்றப் புலனாய்வு திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது. வரி வருமான இழப்பு தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்யவுள்ளதாக நிதி மற்றும் வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

# தேங்காய்ப் பிரச்சினை 6 மாதங்களில் தீர்வு



கொழும்பு, டிசெ.4

சந்தையில் தேங்காய் விலை தற்போது வேகமாக அதிகரித்து வரும் நிலையில் அரசாங்கம் என்ற ரீதியில் அடுத்த ஆறு மாதங்களில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் எனத் தென்னை பயிர்ச்செய்கைசபை தெரிவித்துள்ளது.

சந்தையில் தேங்காய் விலை தற்போது வேகமாக அதிகரித்து வருகிறது. பல பகுதிகளில் தேங்காய் ஒன்று 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது. தென்னை ஏற்றுமதி மற்றும் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக சுமார் 100 கோடி தேங்காய் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் என்ற ரீதியில் அடுத்த ஆறு மாதங்களில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என நம்புகிறோம் என அதன் தலைவர் சமன் தேவகே சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செலவறிக்கை சமர்ப்பிப்பு வெள்ளியே இறுதிநாள்!

## வேட்பாளர்களுக்கு ஆணைக்குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 4

**கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் செலவு விவரங்களை வெளியிட எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.**

எதிர்வரும் 6 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குள் அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சைக்குழு வேட்பாளர்கள் செலவு விவரங்களை வெளியிடவேண்டும். வேட்பாளர்கள் போட்டியிட்ட மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் இந்த விவரங்கள் ஒப்படைக்கப்படவேண்டும். எதிர்வரும் 6 ஆம் திகதிக்குள் செலவு விவரங்களை வழங்காவிட்டால் அது ஒரு சட்டவிரோத செயற்பாடாகக் கருதப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நிவாரப்பணியில் இடையூறு இருவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், டிசெ. 4

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தகராறில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்கள் வழங்கும் போது அங்கிருந்தவர்களில் சிலர் கடமையை செய்யவிடாது இடையூறு செய்தனர் என அப்பகுதி கிராம அலுவலரால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டதற்கமைய இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் இன்று புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச-25, 100)

# வானூர்தியில் வினாத்தாள்கள்

யாழ்ப்பாணம், டிசெ.4

நெடுந்தீவு, வேலணை, நயினாதீவு பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட க.பொ.த. உயர்தர பரீட்சை வினாத்தாள்களும், விடைத்தாள்களும் உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாண பிராந்திய சேகரிப்பு நிலையத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை எடுத்துவரப்பட்டுள்ளன.

இவ்வாறு எடுத்துவரப்பட்ட வினாத்தாள்களும் விடைத்தாள்களும் பரீட்சைத்திணைக்கள அதிகாரிகளால் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. (ச-25, 6)

மின்சாரசபை

# யாழ்.அலுவலகத்தில் உபகரணங்கள் திருட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 4

யாழ்.போதனா மருத்துவமனைக்கு அருகிலுள்ள மின்சாரசபை அலுவலகத்தில் பெறுமதியான உபகரணங்கள் அண்மையில் களவாடப்பட்டுள்ளன.

அலுவலகத்திலிருந்த 11 இலட்சத்து 7 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களே களவாடப்பட்டுள்ளதாக குறித்த பிரிவுக்குப் பொறுப்பான மின் அத்தியட்சகர் கந்தசாமி நாவேந்திரன் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ச-125)

# பருத்தித்துறைக் கடலில் 18 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 4

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 18 இந்திய மீனவர்கள் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து ஒரு படகும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட 18 மீனவர்களும் காங்கேசந்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகத்தில் வைத்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச-100-20)

# பலாலியூடான பயணிகள் சிரமமெனில் அறிவிக்குக

யாழ்ப்பாணம், டிசெ. 4

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகப் பயணிப்பவர்கள் ஏதாவது அசௌகரியங்களை எதிர்கொண்டால் அறிவிக்கலாம். அதன்படி விமான நிலையத்தின் செயற்பாட்டு முகாமையாளர் அமரதுங்கவின் 0774653915 என்ற இலக்கத்துக்கோ அல்லது வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் 021 221 9373 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்புகொள்ளமுடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (ச-125-66)






'பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் முருங்கை மரத்தில தான் குடும்பம் நடத்தோணும். பேய்த்தனமா வாக்குப் போட்டால் மானங்கெட்டுத்தான் வாழோணும். எங்கட சனம் என்னத்தைத் திண்டால் பித்தம் தெளியும் எண்டு தெரியாமல், சும்மாகிடந்த வில்லுத்தகட்டை எம்.பி.யாக்கி விட, அது இப்ப' எதிர்க்கட்சித் தலைவரின்ர சீற்றைக் கொண்டுவா, எருமைமாட்டின்ர சீலையைக் கொண்டுவா' அடம்பிடிக்குது. சும்மா அடம்பிடிச்சால், 'சரி முன்னப்பின்ன பார்லிமெண்டைக் காணாததால இப்பிடி ஆலாதிப்படுகுது' எண்டு மனதைச் சமாதானப்படுத்தலாம். ஆனால் விம்புக்கு நிண்டால் என்ன செய்யிறது? எங்கட ஆக்களுக்கு வில்லுத்தகட்டின்ர புசத்தலும் மூச்சுக்கு முந்நூறுதரம் 'படிக்காத மோடா, நான் டொக்டரா' எண்டுற புழுத்திப் பேச்சும் பழக்கப்பட்டு சுரணை கெட்டுப்போட்டுது. அப்பிடிச் சுரணைகெட்டதாலதானே வாக்குப்போட்டு பார்லிமெண்டுக்கு அனுப்பினனாங்கள்.

முதல்நாள் பார்லிமெண்டிலதான் விசயம் தெரியாமல் எதிர்க்கட்சித் தலைவரின்ர சீற்றில போய் குந்தியிருந்து, பேஸ்புக்லைவ் விட்டதைக் சுவடமன்னிக்கலாம். ஆனால் நேற்று வில்லுத்தகடு செய்த வேலையாலை யாழ்ப்பாணத்தின்ர மானம் கப்பலில போட்டுது. வில்லுத்தகட்டுக்கு பார்லிமெண்டில பேசுற நேரத்தை ஒதுக்கீடு செய்யிறது எதிர்க்கட்சித் தலைவரின்ர அலுவலகம் தான். ஆள் அங்கபோய் 'எனக்கு எப்ப பேச ரைம் போட்டிருக்கு? நீங்கள் ரைம் தரப்போறியளோ இல்லாட்டி நானே ரைம் எடுத்து பேசவோ?' எண்டு சொல்ல, அங்க இருந்தவையும் எதிர்த்துக் கதைச்சிருக்கினம். உடன வில்லுத்தகடு சூடாகிட்டுது. ஆள் சூடானால் வாயில என்ன வருமெண்டு தெரியும் தானே. நந்தவனத்தில் ஓர் ஆண்டியைத் தவிர மிச்ச எல்லா ஆண்டியும் சொல்லி, ஆள் கண்டபடி கத்த அவங்கள் கழுத்தைப் பிடிச்சு வெளியில தள்ளிட்டாங்கள்.

மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு திரும்ப பார்லிமெண்ட் கூடினது. அப்ப எதிர்க்கட்சி எம்.பி.மார் எல்லாம் கெம்பியெழும்பி 'பார்லிமெண்டுக்கு ஒரு மரியாதை இருக்கு. இஞ்ச ஒரு பைத்தியம் எதிர்க்கட்சித் தலைவரின்ர ஒப்பீஸுக்குள்ள புகுந்து தூசணம் கதைச்சு சண்டை பிடிக்குது. இப்பிடி பார்லிமெண்ட் நடைமுறை தெரியாததுகளை இஞ்ச வைச்சிருக்காமல் வெளியில விடோணும்' எண்டு நளின் பண்டார ஒருபக்கம் போட்டுத்தாக்க, பதிலுக்கு 'என்னை ஒப்பீஸ் ரூமுக்குள்ள வைச்சு சுஜித் பெரேரா எம்.பி. அடிச்சுப்போட்டார், நுள்ளிப்போட்டார்' எண்டு பள்ளிக்கூடப் பிள்ளையள் மாதிரி சபாநாயகரிட்ட வில்லுத்தகடு கொம்பிளைண்ட் பண்ணியிருக்குது. 'அப்பிடி ஒண்டுமே நடக்கேலை. வேணுமெண்டா அங்க இருந்த பார்லிமெண்ட் அதிகாரியளை விசாரியுங்கோ' எண்டு சுஜித் பெரேராவும் மறுத்தான் குடுத்தவர். எண்டாலும் நேற்று ஹோவிதானகே எம்.பி. சொன்னதுதான் ஹைலைட்.

'எல்லாரும் சனத்துக்குச் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுங்கோ. அப்பிடிச் செய்யாட்டி, யாழ்ப்பாணச் சனம் இப்பிடியொரு றிக்ரொக்காரரை பார்லிமெண்ட் அனுப்பினமாதிரி, கடைசியா றிக்ரொக் பார்லிமெண்ட் தான் நடத்தோணும். உந்த றிக்ரொக் விளையாட்டுகளை இஞ்ச விடாமல் வெளியில விடோணும்' எண்டு அவர் சொன்னதைக்கேட்டு வில்லுத்தகட்டுக்கே சிரிப்பு வந்திட்டுது. இன்னும் என்னென்ன கூத்துகளை காணப் போறமோ?

(இண்டைக்கு சொல்லயிருந்த வீட்டுக்கட்சியின்ர விசயங்கள நாளைக்குப் பாப்பம்)

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வெளியூரில் அமைந்திருக்கும் பிரசித்திபெற்ற கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும். தாய்வழி உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். கணவன்– மனைவிக்கிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் நீங்கும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும். பிள்ளைகள் வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கி விடுவது சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் ஏற்படும்.

**துலாம்:** பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில்எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.


**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். அதே நேரம் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் இருந்து வந்த இழுபறி நிலை மாறி, அனுகூலமாக முடியும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு நவீன டிசைனில் புதிய ஆடைகளை வாங்கும் யோகம் ஏற்படும்.



## யானைக்கு சிகிச்சை!

வவுனியா, டிசெ.4
வவுனியா - குடாகச்சக்கொடி வயல்வெளியில் சுகயீனம் காரணமாக வீழ்ந்து கிடந்த யானை ஒன்று வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் அண்மையில் மீட்கப்பட்டது.
இந்தநிலையில் அதற்கு கடந்த ஐந்து நாள்களாக சிகிச்சை அளிக்கப்பட்டுவரும் நிலையில் அதன் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-22-25-110)

## யாழ்ப்பாணம்- மாத்தளை கலாசாரம் வலுப்படுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ.4
யாழ்.மாவட்டத்துக்கும், மாத்தளைக்கும் இடையில் மொழிமூலம் கலாசார ஒருங்கிணைப்பையும், பரஸ்பரப் புரிந்துணர்வையும் வலுப்படுத்தும் நோக்கில் மாத்தளையிலிருந்து இளைஞர், யுவதிகள் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வருகை தந்தனர்.
அறிமுக நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிகச் செயலாளர் எம்.எல். கம்மம்பில மற்றும் நிர்வாக அலுவலர் திருமதி ஏ.ஏ.எப். நதிமியா, யாழ். உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, தேசிய மொழிகள் மாகாணப் பொறுப்பதிகாரி ந. உமாநாத், அமைச்சின் தேசிய மொழிகள் பிரிவின் உத்தியோகத்தர்கள், மாத்தளை மற்றும் யாழ்.மாவட்டங்களின் இளைஞர், யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-66-9)



## 'அரங்க வலைகள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ, 4
நீ.மரியசேவியர் அடிகளாரின் மேற்புலத்தில் நிலவிய நவவேட்கைவாத மற்றும் மாற்றரங்குகள் பற்றிய 'அரங்க வலைகள்' எனும் பெயரில் எழுதி 'கலைமுகம்' இதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு நூல் குமரன் புத்தக இல்ல வெளியீடாக வெளிவரவுள்ளது. இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் .பல்கலைக்கழக ஆங்கிலமொழி கற்பித்தல் துறையின் பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் கலந்து கொள்ளவுள்ளார்.
நூலின் வெளியீட்டுரையை கி.செல்மர் எமிலும், மதீப்பீட்டுரைகளை பா. அகிலன், சி. ரமேஷ், நா.நவராஜ் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (ச-25)



## கந்தர்மடம் அஜந்தனின் இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.4
எழுத்தாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான கந்தர்மடம் அஜந்தனின் 'மரணங்களின் சாட்சியாக' எனும் சிறுகதைத் தொகுதி மற்றும் 'ஆற்றுப்படுத்தும் கலையும் சிலையும்' எனும் கட்டுரைத் தொகுதி ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா மூத்த எழுத்தாளரும், உளவியலாளருமான கோகிலா மகேந்திரன் தலைமையில் யாழ். ராஜா கிறீம் ஹவுஸ் ஹம்சியா மஹால் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரன் நூலின் வெளியீட்டுரையை ஆற்றினார். தலைமைப் போதகர் லெஸ்லி மத்தியூஸ் நூல்களை வெளியிட்டு வைத்தார். (ரி-66)



அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ப்ரத்யங்கிரா அறக்கட்டளையினூடாக லண்டனில் வசிக்கும் அன்ரனி குடும்பத்தின் நிதி அனுசரணையில் சாந்தை, துணவி, நவாலி, உடுவில், சங்குவேலி ஆகிய 5 கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 660 குடும்பங்களுக்கு கடந்த சனிக்கிழமை பாண் வழங்கிவைக்கப்பட்டது. (ச-45-63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரது ஒத்துழைப்புடன் வெள்ளஇடருக்கு நிரந்தரத் தீர்வு

## யாழ். மாவட்ட பதில் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.4


வெள்ள அனர்த்தம் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு வடிகால் அமைப்புகளைச் சீர் செய்யவும், பொறிமுறைகளை உருவாக்கவும் அனைத்துத் திணைக்களங்களின் ஒத்துழைப்புகளையும் எதிர்பார்க்கின்றோம் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் கடந்த 18ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வரையிலான காலப்பகுதியில் 697.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது. கனமழை காரணமாக 21 ஆயிரத்து 987 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 693 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான வெள்ள அனர்த்தம் ஏற்படாத வகையில் வடிகால் அமைப்புகளைச் சீர் செய்யவும், பொறிமுறைகளை உருவாக்கவும் அனைத்துத் திணைக்களங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். பிரதேச செயலக ரீதியாக எங்கு வெள்ளம் வடிந்தோட முடியாத நிலைமை காண்படுகின்றது என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம்-என்றார். (எ-33,125)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர்வேலி தெற்கு முருகையன் ஆலயத்தால் பிஸ்கட், பாண் மற்றும் சமைத்த உணவு என்பன மக்களின் உதவியுடன் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ரி-17)







# மன்னார் மக்களைச் சந்தித்த அமைச்சர் சரோஜா சாவித்திரி

மன்னார், டிசெ.4

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மன்னாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை நேரில் சென்று சந்தித்து, அத்தியாவசிய உதவிப் பொருள்களை வழங்கியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் சென்ற அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், பிரதி அமைச்சர் மருத்துவக் கலாநிதி நாமல் லக்ஸ்மன, நாடாளுமன்ற உறுப்பினர் சமன்வெளி குணசிங்க, அமைச்சின் செயலாளர்கள் கொண்ட குழு மக்களைச் சந்தித்து உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது. (எ-25,60)

# உப்புக்கேணி வெள்ளத்தை வெளியேற்ற நடவடிக்கை!

யாழ்ப்பாணம், டிசெ.4

சாவகச்சேரி - கச்சாய், உப்புக்கேணிக் கிராமத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள இடர்களை யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அங்கு 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தேங்கியுள்ள வெள்ளத்தை தண்ணீர் பம்பிகள் ஊடாக வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடி நிரந்தரத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட பதில் செயலாளர் மக்களுக்குத் தெரிவித்தார். (எ-25,66)

# பதுக்கப்பட்டிருந்த வாகனம் மீட்பு!


கொழும்பு, டிசெ.4

உரிய பதிவுகள் இல்லாத 'லேண்ட் றோவர்' வாகனம் ஒன்று பொல்கசோவிட்ட பகுதியில் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல்மாகாணப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வாகனத் தரிப்பிடம் ஒன்றிலிருந்து இந்த வாகனம் மீட்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட விசாரணைகளில் பிக்கு ஒருவர் பகுதி, பகுதியாக வாகனத்தின் பாகங்களைக் கொண்டு வந்து திருத்தகம் ஒன்றில் பொருத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் மஹரகமவில் உள்ள பௌத்த விகாரை ஒன்றின் பிரதம பிக்குவிடம் வாக்குமூலம் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-ரி)





வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம், தவசிகுளம், நாவலடி மற்றும் போக்கட்டி கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள குடும்பங்களுக்கு சாவகச்சேரி, சங்கத்தானை அருள்மிகு வைரவசுவாமி கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினரால் உணவுப் பொருள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 400க்கும் மேற்பட்டவர்களுக்கு சமைத்த உணவும், 50க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருள்களும், சிறுவர்களுக்கான பால்மா வகைகளும் வழங்கப்பட்டுள்ளன. (எ-25)

# ஒருகுடையின் கீழ் மாறும் நாடாளுமன்றக் குழுக்கள்

கொழும்பு, டிசெ. 4

கடந்த அரசாங்கத்தின் போது தன்னிச்சையாக நியமிக்கப்பட்டதாக கூறப்படும் நாடாளுமன்றத்தின் பல குழுக்களை இரத்துச் செய்ய அல்லது மாற்றுவதற்கு நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது.


இந்தக் குழுக்களை நியமித்ததால் பெருமளவு பணம் விரயமாவதை அரசு கண்டறிந்ததை அடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. நாடாளுமன்றக் குழுக்களின் முறையான நியமனம் தொடர்பான விடயங்களை மறுஆய்வு செய்து அதற்கான முன்மொழிவுகளை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

குறிப்பாகப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய பலதுறைசார் கண்காணிப்புக் குழுக்கள் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றை ஒரே குழுவின் கீழ் கொண்டுவர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிலநிற தத்தியின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள்

## விவசாயத் திணைக்களம் வேண்டுகோள்



**கிளிநொச்சி, டிசெ.4**

**கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்வயல்களில் கபில நிறத் தத்தி மற்றும் மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் ஒத்துழைக்கவேண்டும் என்று கிளிநொச்சி விவசாயப் பணிப்பாளர் சோதிலட்சுமி விஜயதாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கிளிநொச்சி விவசாயத் திணைக்கள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த சிலநாள்களாகக் காணப்பட்ட மழையுடனான காலநிலை காரணமாக நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

புளியம்பொக்கணை, பளை, முரசுமோட்டை, பெரியபரந்தன் ஆகிய இடங்களில் நோய்த்தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. நோய்த்தாக்கத்தைக் கட்டுப்படுத்த விவசாய போதனாசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அதேவேளை, வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்கள், சிறுதானியச் செய்கை மற்றும் மரக்கறிச் செய்கை தொடர்பான விவரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன- என்றார். (எ-113)

### இ.போ.ச. கிளிநொச்சி சாலை ஊழியர்களின்

# திடீர்ப் பணிப்புறக்கணிப்பால் பயணிகள் பெரும் அந்தரிப்பு



கிளிநொச்சி, டிசெ.4

முன்னறிவித்தல் இன்றி இலங்கை போக்குவரத்துச்சபையின் கிளிநொச்சிச் சாலை ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தால் நேற்றுப் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் கிளிநொச்சிச் சாலை ஊழியர்கள் நேற்றுமுன்தினம் திடீர்ப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். கிளிநொச்சி சாலையில் இடம்பெறும் நிர்வாக ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அதனால் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

முன்னறிவித்தல் இன்றித் திடீரென மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது என்று பயணிகள் தெரிவித்துள்ளனர். வேலைநாளான நேற்றுத் திடீரென மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தால் பணிகளுக்குச் செல்லக் காத்திருந்த பயணிகள் அந்தரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றும் அவர்கள்

# இளமருதங்குளம் கொலை சந்தேகநபர் ஒருவர் கைது

வவுனியா, டிசெ.4

வவுனியா, இளமருதங்குளம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் பழைய பகை ஒன்றின் காரணமாக நடத்தப்பட்டுள்ளது என்று சந்தேகிக்கப்படுகின்றது. ஐந்துபேர் கொண்ட குழுவே இளமருதங்குளத்துக்குச் சென்று 46 வயதுடைய குடும்பஸ்தர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியிருந்தது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் வவுனியா, கூமாங்குளத்தைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் வேறு சிலரும் தொடர்புபட்டுள்ளனர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ள நிலையில், அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)



# யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வதேச சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ.4

இலங்கை சதுரங்க சம்மேளனம் மற்றும் ஆசிய சதுரங்க சம்மேளனம் ஆகியவற்றின் பூரண ஆதரவுடன் யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனம் நடத்தும் 'யாழ்ப்பாண சர்வதேச சதுரங்கப் போட்டி 2024' கொக்குவிலில் அமைந்துள்ள செல்வா பலஸ் மண்டபத்தில் கடந்த 30ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. இந்தப் போட்டிகள் இன்று வரை இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டியில் சுமார் 750க்கும் மேற்பட்ட சதுரங்க வீரர்கள் பங்குபற்றுகின்றார்கள். இந்தியா, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் இலங்கையின் சகல மாவட்டங்களில் இருந்து போட்டியாளர்கள் கலந்துகொண்டுள்ளனர். இப்போட்டியில் சுமார் 24 லட்சம் ரூபா பெறுமதியான பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசுத்தொகை 150க்கு மேற்பட்ட வீரர்களுக்கு கிடைக்கும் விதமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் சதுரங்க வீரர்கள் தங்கள் தரத்தை அதிகரித்துக்கொள்ள உதவும் என்றும், பல சதுரங்க வீரர்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லைக்கா ஞானம் பவுண்டேஷன் நிறுவனம் மற்றும் வெளிநாடு, உள்நாட்டில் வசிக்கின்ற நலன் விரும்பிகளின் நிதிப் பங்களிப்புடன் நடைபெறுகின்றது. (எ-33-125)

# மீன்களின் விலை சரிவு

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ். குடாக்கடலில் மீனவர்களின் வலையில் கூடுதலாகப் பிடிபடும் ஒட்டி, ஓரா ஆகிய மீன்கள் சந்தைக்கு அதிகமாக வந்து சேர்வதால் அவற்றின் விலை சரிந்து காணப்படுகின்றது.

தீவுப்பகுதி மற்றும் யாழ்.குடாக்கடல் ஏரி போன்ற கடற்பகுதியில் இருந்த மீன்கள் கூடுதலாக விற்கப்படுகின்றன.

தற்போதைய காலநிலை மாற்றத்தால் இந்த மீன்கள் அதிகளவில் மீனவர்களின் வலையில் பிடிபடுகின்றன என்று மீனவர்கள் தெரிவித்தனர். (எ-ரி-17)

# திடீரென பற்றியெரிந்த கார்

கொழும்பு, டிசெ.4

கொழும்பு நோக்கிச் சென்ற கார் ஒன்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் திடீரெனத் தீப்பிடித்து எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே கார் தீப்பிடித்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-ரி)

# உயிரைப் பறித்தது குரங்கின் குரும்பை

கொழும்பு, டிசெ.4

குரங்கு பறித்த குரும்பை கழுத்தில் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் புலத்கொஹுபிட்டியவில் நடந்துள்ளது. 81 வயதான ஏ.ஜி.ஜயசேன என்பவரே உயிரிழந்தவராவார். வீட்டுக்கு அருகே இருக்கும் தென்னை மரங்களிலிருந்து வீழ்ந்த தேங்காய்களைப் பொறுக்கிக் கொண்டிருந்த அவரது கழுத்தில் குரும்பை வீழ்ந்துள்ளது. (எ-45)

# சட்டவிரோத அகழ்வு மூவர் கைது

நுவரெலியா, டிசெ. 4

மஸ்கெலியா, சோலகந்த தோட்டப்பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து மாணிக்கக்கல் அகழ்வுக்கான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நேரத்தைத் தள்ளிப் போடாதே,
தாமதத்தால் அபாயமான முடிவே ஏற்படும்

- ஷேக்ஸ்பியர் -


# மாறாத கொள்கை ; மாறும் சுருதிகள்

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்திருக்கும் நிலையில், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகத் தனது சுருதியை மாற்ற ஆரம்பித்திருக்கின்றது. தேர்தல்களுக்கு முன்னர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அடக்கி வாசித்த தேசிய மக்கள் சக்தி, அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றியீட்டிய பின்னர் தனது சுயரூபத்தைக் காட்ட முற்படுகின்றது என்றே அதன் இப்போதைய சில செயற்பாடுகள் மூலம் ஊகிக்க வேண்டியிருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணியில் அதாவது தேசிய மக்கள் சக்தியில் தீர்மானங்களை எடுக்கவல்ல பதவியில் இருக்கும் ரில்வின் சில்வா, நடைமுறையில் உள்ள மாகாணசபை முறைமையை அகற்றியே தீருவோம் என்று கூறியிருப்பதை சாதாரண விடயமாகக் கடந்துவிட முடியாது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அநுரகுமார திஸாநாயக்க 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்ற வாக்குறுதியை வழங்கியிருந்தார். அதுமட்டுமன்றி இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவரும்வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்றும் கூறியிருந்தார். தமிழ் மக்களின் கணிசமான வாக்குகள் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு -தேசிய மக்கள் சக்திக்குக் கிடைப்பதற்கு இந்த வாக்குறுதிகள் பெரும்பங்கு வகித்தன என்பதை எவரும் மறுக்கமுடியாது. நீண்டகாலமாக தெற்கு அரசியல் கட்சிகளால் ஏமாற்றத்துக்குள்ளாக்கப் பட்டு வந்த தமிழ் மக்கள், அநுரகுமார திஸாநாயக்க தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை வழங்குவார் என்று நம்பியிருந்தார்கள். ஆனால் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் இப்போதைய நிலைப்பாடுகள் மீண்டும் தமிழ் மக்கள் நம்பிக் கெட்டுள்ளார்களோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக இப்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மாகாணசபை முறைமையை முற்றாக நீக்குவோம் என்று கூறியிருக்கின்றார் ரில்வின் சில்வா. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவோ அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவாகியிருக்கும் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களோ அது தொடர்பாக கள்ளமௌனம் காப்பதையும் காணமுடிகின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் அதாவது ஜே.வி.பி.யின் பழைய கொள்கையான 'மாகாணசபை முறைமை நீக்கம்-மீண்டும் துளிர்விட்டிருப்பது' அவர்களின் அடிப்படை எண்ணங்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதையே உணர்த்துகின்றது.

வடக்கு, கிழக்கில் இருந்து கிடைத்த வாக்குகள் தங்கள் பழைய கொள்கைகளுக்கானவையே என்று தேசிய மக்கள் சக்தியின் பெயரில் இருக்கும் மக்கள் விடுதலை முன்னணி நினைக்குமானால் அது முற்றிலும் தவறு. மாற்றம் என்ற கோஷத்துடன் மக்கள் முன்நின்ற அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் தங்கள் இனவாதச் சிந்தனைகளை மாற்றிச் சிந்திப்பார்கள் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடே அவர்களுக்குக் கிட்டிய வாக்குகள். ஆனால் அவர்கள் தங்கள் இனவாதச் சிந்தனையை மாற்றாமல் - தங்களின் தீர்மானங்களை தமிழ் மக்கள் மீது திணிக்க முற்பட்டால் அவர்கள் தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடும் என்பது வெளிப்படை. நாட்டில் அனைவரும் சம உரிமையுடன் நடத்தப்படுவார்கள் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறினாலும், தமிழ் மக்கள் நீண்டகாலமாக அனுபவித்துவரும் அடக்குமுறைகளுக்கு அதிகாரப் பகிர்வே தீர்வாக அமையும். அதை மறுத்து தேசிய மக்கள் சக்தி தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை - ஜே.வி.பி.யின் இனவாதச் சிந்தனையை நடைமுறைப்படுத்தும் களமாகப் பாவித்தால் நிச்சயம் அவர்களையும் முன்னைய கடும்போக்கு சிங்கள அரசாங்கங்கள் போன்றே தமிழ் மக்கள் நிராகரிப்பார்கள் என்பது திண்ணம்.




# பொலிஸ் உயர்பதவிகளுக்கு முதல்முறையாக பெண்கள்

கொழும்பு, டிசெ. 4

**இலங்கைப் பொலிஸ் வரலாற்றில் முதல்முறையாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட பிரதான பிரிவுகளின் உயர் பதவிகளுக்கு பல பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் நான்கு பெண்கள் உட்பட 54 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
இதில் பெண் நியமனங்களில், எஸ்.எஸ்.பி. இ.எம்.எம்.எஸ். தெஹிதெனியவுக்குப் பதிலாக, சி.ஐ.டி.யின் முன்னாள் பிரதிப் பணிப்பாளராக இருந்த எஸ்.எஸ்.பி.முதுமல, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.
புதிய எஸ்.எஸ்.பி.யாக நுகேகொட பிரிவுக்கு பொறுப்பேற்க தெஹிதெனிய இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.எல்.ஆர்.அமரசேன விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த எஸ்.எஸ்.பி. ஆர்.ஏ.டி.குமாரி, பொலிஸ் களப் படைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# கோபா குழுவின் தலைமைக்கு ஹர்ஷவின் பெயர் பரிந்துரை

கொழும்பு,டிசெ.4
10 ஆவது நாடாளுமன்றத்தின் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை முன்மொழிவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஹர்ஷ டி சில்வா மீண்டும் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ட்ரோன் கண்காணிப்பு

கொழும்பு,டிசெ.4
போக்குவரத்தை கண்காணிக்க நேற்றுமுன்தினம் முதல் ட்ரோன் கமராக்கள் பயன்படுத்தப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பதில் பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகதெரிவித்துள்ளார். (ச)

# பொலிஸ் ஊடக பேச்சாளராக கே.பி.மனதுங்க



கொழும்பு, டிசெ. 4
பொலிஸ் ஊடகப் பணிப்பாளராகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான நிஹால் தல்துவ குற்றப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக தொடர்ந்து நீடிப்பார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# எதிர்க்கட்சி கொறடாவாக கயந்த

கொழும்பு,டிசெ.4
ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி பிரதம கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா இதனைத் தெரிவித்துள்ளார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2022...

மக்கள் முன்னணியைச் சேர்ந்தவரும், பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் உறுப்பினருமான ப.சுரேஷிடமே நேற்று நான்கு மணிநேரம் இவ்வாறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றது. (அ-ம-26)

## உ/த பரீட்சைகள்...

கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில், கனமழை காரணமாக 27ஆம் திகதி முதல் பரீட்சை தற்காலிகமாகநிறுத்தப்பட்டன. இந்தநிலையில், இன்று முதல் பரீட்சைகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. (அ-ம-இ)

## கோப்பாய்,...

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக டெங்குத் தொற்று தீவிரமாகி வருகின்றது. இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 5 ஆயிரத்து 453 பேர் டெங்குத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர். செப்ரெம்பர் மாதம் 42 பேரும், ஒக்ரோபர் மாதம் 69 பேரும், நவம்பர் மாதம் 134 பேரும் டெங்குத் தொற்றுடன் அவதானிக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் பார்க்கும்போது நாளுக்குநாள் டெங்குத் தொற்று மிகவும் ஆபத்தானதாக மாறிவருகின்றமை தெளிவாகின்றது. யாழ்ப்பாணம், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், சங்கானை, சாவகச்சேரி ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் டெங்குத் தொற்று பரவி வருகின்றது. குறிப்பாக, யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறையிலும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட உரும்பிராயிலும் டெங்குத் தொற்று மிக வேகமாகியுள்ளது - என்றார். (அ-ம-125)

## இந்திய...

களுக்கும், ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆரம்பகட்ட விசாரணைகள் மற்றும் விளக்கமறியலைத் தொடர்ந்து மீனவர்கள் 23 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டனர். வழக்கை ஆராய்ந்த நீதிவான் மீனவர்கள் அனைவருக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். இதன்படி, அத்துமீறிய மீன்பிடிக்காக அனைவருக்கும் தலா இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அந்தத் தண்டனை 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆறு வருடங்களுக்கு இவர்கள் மீண்டும் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் பட்சத்தில் தற்போது விதிக்கப்பட்டுள்ள 2 வருட சிறைத் தண்டனையும் சேர்த்து எதிர்காலத்தில் அனுபவிக்க நேரிடும். 23 பேரில் மூவர் படகோட்டிகள். அவர்களுக்குத் தலா 4 மில்லியன் ரூபா தண்டமும், மேலதிகமாக ஆறு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து மேலதிகமாக 3 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-27)

## வங்காள...

வித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வங்காள விரிகுடாவில் புதிய காற்றுச் சுழற்சி உருவாக வாய்ப்புள்ளது. இன்றைய நிலையில் இது ஒரு காற்றுச் சுழற்சியாகவே உள்ளது. ஆனால், எதிர்வரும் நாட்களில் வங்காள விரிகுடாவில் நிகழும் வளிமண்டல நிலைமைகள் இதனை ஒரு தாழமுக்கமாக மாற்றலாம். தற்போது இந்தக் காற்றுச் சுழற்சியின் நகர்வு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அண்மையாக நகரும் என மாதிரிகள் காட்டுகின்றன. ஆனால், இதனை அடுத்த சில நாள்களிலேயே உறுதிப்படுத்த முடியும். இதன்காரணமாக எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. சில இடங்களில் மிகக் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இந்த மழை நிலைமையைக் கருத்தில் கொண்டு செயற்படுவது சிறந்தது - என்றார். (அ-ம-66)


### மணிவிழா நாள் வாழ்த்து

04.12.2024

திருமதி திலகவதி ரவிச்சந்திரன்

(இசைக் கலைமணி)



**சேவைக்காலம்:**

1. யா/ கரம்பை அ.மி.த.க.பாடசாலை 17.08.1988 - 14.05.1991
2. யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் 15.05.1991 - 02.01.1995
3. யா/ மிருசுவில் அ.த.க. பாடசாலை 03.01.1995 - 01.08.2010
4. யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் 02.08.2010 - 04.09.2018
5. யா/ கச்சாய் மகா வித்தியாலயம் 05.09.2018 - 03.12.2024

ஆசிரியரின் சிறப்பான சேவையைப் பாராட்டி இந்நாளில் இறைவனருளுடன் பல்லாண்டு காலமாக சமூகப்பணி தொடரவும் ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்

யா/ கச்சாய் மகாவித்தியாலயம்

(CR/43823) J-1



# அறுபதாவது அகவை வாழ்த்துக்கள்

Best Wishes

இசை ஆசிரியை

திருமதி திலகவதி ரவிச்சந்திரன் SLTS-I

இசைக் கலைமணி

பசுமை நிறைந்த வரணியூர் பதியினிலே
நாவற்காடு எனும் சிற்றூரில் எங்கள்
மூத்தவளாய் அவதரித்த வித்தகி
இசை எனும் சுரப்பால்
இசை ஆசிரியராய்
பள்ளியில் பணிசெய்த முதல்வி

கூட்டுக்குடும்பத்தில் தினம் எம்மை
வலம் வரும் தென்றலானீர்
வாழ்வில் ஏணிப்படியாய் எம்மை
எல்லாம் ஏற்றிவைத்த ஏணியானீர்

உழைப்பிற்கும் உண்மைக்கும் முதலிடம் அளித்து
ஊரவர் போற்ற உறவுகள் வாழ்த்த எம்மை
ஒரு குடைக்கீழ் காக்கின்ற தாயானீர்
முப்பத்தாறு ஆண்டுகள் சேவையாற்றி இன்று
அறுபதாவது அகவை காணும் நீவிர்

பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி
இயலுமைகளோடும் ஆற்றல்களோடும் வாழ
இச்சேவை ஓய்வுக்காலத்தில்
மனதார வாழ்த்துவதில் பெருமைகொள்கிறோம்
இறை ஆசியுடன் உம் உறவுகள் நாம்



நாவற்காடு
வரணி

சகோதரர்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

04.12.2024
புதன்கிழமை

கனிவான முகத்துடன்
கொடுக்கப்படும் பரிசு
என்பது இரட்டிப்பு
அன்பளிப்புக்கு
சமமானது.

- தோமஸ் புல்லர்

# இளைஞர்களை ஆட்கொள்கின்ற போதைப்பொருள்

**ஜே.மங்களதர்ஷினி**
*ஊடகவியல் துறை*
*கலைப்பீடம்*
*யாழ். பல்கலைக்கழகம்.*



> **யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையானது பொருளாதார நெருக்கடி, கல்வி மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் மற்றும் சமூகச் சீர்குலைவு போன்ற காரணிகளால் உந்தப்படுகிறது. அத்துடன், அதிக ஆபத்தானவையாக அறியப்படும் கஞ்சா, ஹெரோய்ன் மற்றும் மெத்தம்பேட்டமைன் போன்ற போதைப் பொருள்கள் மிகவும் இலகுவாக அணுகக்கூடியதாகி வருகின்றன.**

போதைப்பொருள் என்பது யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்தும் ஆட்டிப்படைத்து வருகின்றது. போதைப்பொருள் பாவனைகள், வன்முறைகள் தொடர்பான சவால்களுடன் யாழ்ப்பாணம் தொடர்ந்து போராடுகிறது. யாழ். மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையானது பொருளாதார நெருக்கடி, கல்வி மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் மற்றும் சமூகச் சீர்குலைவு போன்ற காரணிகளால் உந்தப்படுகிறது. அத்துடன், அதிக ஆபத்தானவையாக அறியப் படும் கஞ்சா, ஹெரோய்ன் மற்றும் மெத்தம்பேட்டமைன் போன்ற போதைப்பொருள்கள் மிகவும் இலகுவாக அணுகக்கூடியதாகி வருகின்றன.

போதைப்பொருள் பயன்பாடு சமூகத்தில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இதனால், சுகாதார அமைப்புகளில் உள்ள அழுத்தம் குறிப்பிடத்தக்கது, அதிக மருத்துவச் செலவுகள் மற்றும் மருந்துகள் தொடர்பான செலவுகளுக்கு அரச நிதி பயன்படுத்தப்படுகின்றது.

கூடுதலாக, போதைப்பொருள் பாவனையானது பணியிட உற்பத்தித்திறனை பாதிக்கும் மற்றும் அதிக வேலையின்மை விகிதங்களுக்கு பங்களிக்கும். போதைப் பொருள் பாவனையின் உடனடி விளைவுகள் மற்றும் அது உருவாக்கும் பரந்த, முறையான பிரச்சினைகள் ஆகிய இரண்டையும் தீர்ப்பதற்கான சவால்களை சமூகங்கள் எதிர்கொள்வதால் ஒட்டுமொத்த சமூக அமைப்பும் பலவீனமடைகிறது.

இளைஞர்களிடையே போதைப்பொருள்களின் பரவலானது அடிமையாதல், மனநலக் கோளாறுகள் மற்றும் உடல் உபாதைகள் உள்ளிட்ட கடுமையான உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. இந்த நெருக்கடி நிலையானது கல்வி விளைவுகளை பாதிக்கிறது, பல பாதிக்கப்பட்ட மாணவர்கள் குறைந்த கல்வி செயற்றிறன் அல்லது பள்ளியை விட்டு வெளியேறுகிறார்கள்.

சுகாதார அமைப்புகளின் மீதான பொருளாதார சுமை மற்றும் உற்பத்தித்திறன் இழப்பு ஆகியவை பரந்த சமூக தாக்கத்தை எடுத்துக்காட்டுகின்றன. பள்ளிகளில் தடுப்பு மற்றும் கல்வித் திட்டங்கள், சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகளுக்கான மேம்பட்ட அணுகல் மற்றும் சமூக அடிப்படையிலான ஆதரவு முயற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான அணுகுமுறை இந்த சிக்கலை நிவர்த்தி செய்யக் கூடியதாகவிருக்கும். அதிகரித்து வரும் போதைப்பொருள் நெருக்கடிக்கு விடையிறுக்கும் வகையில், போதைப்பொருள் மற்றும் குற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் போதைப்பொருள் தடுப்பு மற்றும் சிகிச்சை உத்திகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளைத் தொடங்கியுள்ளது.

போதைப்பொருள் பாவனைக் கோளாறுகளுக்கு பயனுள்ள சிகிச்சை முறைகள் குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள சுகாதாரப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது இந்த முயற்சிகளில் அடங்கும். விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மறுவாழ்வு முயற்சிகள் மூலம் போதைப் பழக்கத்தை நிவர்த்தி செய்வதில் உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் சுகாதாரப் பயிற்சியாளர்கள் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். போதைப்பொருள் பாவனைக்கு எதிராக போராடுவதற்கும் இலங்கையின் இளைஞர்களுக்கு ஆரோக்கியமான, அதிக ஆதரவான சூழலை வளர்ப்பதற்கும் அரசாங்க அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அமைப்புகளின் கூட்டு முயற்சிகள் முக்கியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்காரம் ஏங்காரம் ஊங்காரம் ஆக பரப்பிரமம்

மருத்துவர் சி.யமுனாநந்தா

கந்தபுராணத்தில் தசகாண்டத்தில் உபதேசப்படலத்தில் பிரம்மா தனது புத்துப் புதல்வர்களில் ஒருவரான தக்கனின் ஐயத்தை தெளிவுபடுத்துகிறார். இவை வேத உபநிடதங்களின் சாரமாகும். இதில் தக்கன் முழுமுதற் கர்த்தாவான பரம் எவ்வாறு இருப்பர் என வினவ பிரம்மா அருளுகின்றார்.

'உயிருணின்றியற்ற லன்றியுற்ற நஞ் சிந்தையுள்ளும்
இயன்முறை வழாது காப்போனிரு விழியகத்துமானான்
மயலுறு பொழுதும் எம்பால் வந்தருள் செய்வன்றாறோர்.
செயல்புரிகின்றான் போல வெம்மொடு செறிவன்னறே'

(82- 89) (தசகாண்டம் உபதேசப்படலம்)

இப்பாடல் மூலம் இறைவன் எமது உயிர், எமது சிந்தை, எமது விழிகள் என்பவற்றில் செறிவான் என்று கூறப்பட்டுள்ளது. ஆத்மா அலைவடிவானதாக தீங்கனலாக குண்டலினி சக்தியாக அமைவதனை திருமூலர் திருமந்திரத்தில் விளக்குகிறார். நரம்புக்கணைத் தாக்கங்கள் அலை வடிவில் சிந்தையில் அமைகின்றது. அவ்வாறே பார்வைப் புலனும் விழிவழியே ஒளி அலைகளின் வீச்சினால் ஏற்படுகின்றது. இவையாவற்றிலும் உள்ள ஒற்றுமை மின்காந்த அலைவடிவுகளே . இவ்வாறு இறைவன் இவற்றுள் விரகி நிற்பது பரப்பிரமம் என்ற இறைவனின் வியாகமே. இதனை இன்றை இயற்பியலில் குவாண்டம் துவித சேய்நிலை மூலம் ஒப்பிடலாம்.

மேலும் இறைவன் எங்கெல்லாம் உள்ளான் என்பதை

'என்ளுறு மென்எணயென்ன வெறிமணி யரவமென்னக்
கள்ளுறு போது கான்ற கடியெனச் சலாகை தன்னில்
தன்ளுறு அரிய சோதி தானெனவுலக மெங்கு
உள்ளோடு புறமுமாகி யொருமையாற் பரவுமன்றே'

எள்ளில் எண்ணெய் போல் அனைத்து சடத்துவத்தில் ஒலிநாதமாக இரத்தினக்கல்லில் உள்ள ஒளிக்காலல்போல் சோதியாக உலகெங்கும் உள்ளும் புறமுமாகி ஒருமையில் பரவும் பிரமம். இதனையே இன்று நவீன இயற்பியல் கோட்பாட்டில் ஒரு பரிமாணமாக மீநுண்சுருள் அலகுத் தத்துவம், வழிநிலையை எடுத்துக் கூறுகின்றது.


'அவனிது புகறலோடு மருண் மகனிசைப்பான் மேலாம்
சிவனருள் வேதம் பூதத்திறத்தையு முயிர்களோடும்
எவரையும் பிரமமென்றே யிசைப்பதென் எனது நெஞ்சம்
கவலுறுகின்ற தெந்தை கழருதி கடிதிஎன்றான்.'

(82- 92) (தசகாண்டம் உபதேசப்படலம்)

தக்கன் தனது தந்தையிடம் சிவனைப்பற்றி வேத நூல்கள் பஞ்ச பூதத்தையும் உயிர்கள் யாவற்றையும் எவற்றையும் பிரமம் என்று கூறுகிறது. இதனை எனது நெஞ்சம் ஏற்க மறுக்கிறது. விளக்குக என்கின்றான்.

மேற்கூறிய வேத தத்துவத்தையே நவீன விழிநிலை இயற்பியல் கோட்பாடான ஒன்றிய விழிநிலையியல் கோட்பாடு எடுத்தியம்புகிறது.

சிவம் பரப்பிரமம் ஆகவும் ஆன்மா பிரமம், பிராணன் பிரமம் அன்னப்பிரமம் என வெவ்வேறு



இயல்நிலைகளில் அருவமும் உருவமுமாகி அநாதியாய் ஒன்றாய் பலவாய் உருவமாய் சோதிப்பிழம்பதோர் மேனியாக ஒரு திருமுருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய என பரம் அமைகிறது. இதுவே ஆதிபகவன் பகம் என்பது முகம். ஆதிபகவன் என்பது ஆறுமுகமுடைய ஆதியான கடவுள். சிவபெருமானின் ஆறு திருவதனங்களில் தொல்வடிவினனாகவே முருகப்பெருமான் காட்சியும். சடத்துவத்திலும் பிரம்மம் உள்ளதென்பது வேதநெறி உண்மையாகும். இதனை சமஸ்கிருத உபநிடத சொருபங்களில் காணலாம். கந்தபுராணத்தில் யுத்த காண்டத்தில் வரும் பாடலில் சடத்துவத்தின் வழிநிலை படைகளாக கூறப்பட்டுள்ளது.

'காற்படை அழற்படை காலன் தொல்படை
பாற்படு மதிப்படை பரிதியோன்படை
மாற்படை அரன்படை மலரயன்படை
மேற்படு சூர்மகனெடுத்தன் மேயினான்.'

சடத்துவத்திலும் பிரம் மம் உள்ளதென்பது வேதநெறி உண்மை யாகும். இதனை சமஸ் கிருத உபநிடத சொரு பங்களில் காணலாம். கந்தபுராணத்தில் யுத்த காண்டத்தில் வரும் பாடலில் சடத்துவத்தின் வழிநிலை படைகளாக கூறப்பட்டுள்ளது.

இங்கு கால் காற்றினையும் அழல் தீயினையும் காலன் காலத்தையும் பரிதி சூரியனையும் மால் திருமாலையும் அரன் சிவனையும் அயன் பிரமனையும் சார்ந்த சடத்துவத்தின் பிரமவியாபகமாகும். அவற்றினையும் பிரபஞ்ச ஏகத்துவ விழிநிலை அணுகலில் இற்றை விஞ்ஞானம் நோக்குகிறது.

'அந்த நாள் ஒருவனாகி ஆருயிர்த் தொகையைத் தொன்னாள்
வந்த வாறொடுங்கச்செய்து மன்னியே மீட்டுமன்னை
தந்தையாய் உயிர்கட்கேற்ற தனுமுதலளிக்கு முக்கண்
எந்தை தன்செய்கை முற்றுமினைய தென்றிசைக்கற் பாற்றோ'

(கந்தபுராணம் 82- 87)

பரப்பிரமம் ஊழிக்காலத்தில் உயிர்த்தொகையை தன்னுள் ஒருங்கச் செய்தல் ஊங்காரம் எனப்படும். பின் தந்தையாய் உயிர்களுக்கு ஏற்ற கரணபுவன போகங்களை அளித்தல் ஓங்காரமாகும். ஓங்காரத்திற்கும் ஊங்காரத்திற்கும் இடையிலான அவத்தை நிலை அசபை எனும் ஏங்காரமாகும்.



அருவமும் உருவமுமாகி அநாதியாய் ஒன்றாய் பல வாய் உருவமாய் சோதிப் பிழம்பதோர் மேனியாக ஒரு திருமுருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய என பரம் அமைகிறது. இதுவே ஆதிபகவன் பகம் என்பது முகம். ஆதிபகவன் என்பது ஆறுமுகமுடைய ஆதியான கடவுள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# காதலின் சாபம்


சொல்லாத அன்பால் சோகம்
கூடியது என்னுள்ளே
நில்லாத ஞாபகங்கள் நிலை
கொண்டது எனக்குள்ளே

மனமோ வாடியது அன்பை
அடைந்திட வழிதேடியது
நினைவுகள் கொள்வதினால்
நிமிடங்களும் சுமையாகியது

நிசப்த இரவில் எல்லாம்
நெஞ்சுருகி போகிறேன்
எட்டாத அன்பைக் கூட
எட்டித்தொட பார்க்கின்றேன்

என்னுள்ளே மிஞ்சுவது
எந்நாளும் சோகமே
இதுவே நான்பெற்ற
காதலின் சாபமே

ரா. துசேந்தன்
செல்வநகர், மன்னார்






# 'அரங்க வலைகள்' வீசி எமைக் கவர்ந்திழுத்த நீ.மரியசேவியர்

உலக யுத்தங்களுக்குப் பின்னர் மேற்புலத்திலே தோற்றம் பெற்ற மாற்றரங்குகள் பற்றிய அறிவு எம்மத்தியில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அவைபற்றி தமிழில் நூல்களும் எழுதப்படவில்லை. பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள் பல உலக நாடுகளுக்கும் சென்று வந்தவர். பல மொழிகளையும் பேச வல்லவராகவும் இருந்தார். அதனால் அவரளவுக்கு மேற்புலத்து நாடகங்களை எம்மவர்கள் பார்த்திருப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு. அவர் பல நாடுகளிலும் நாடகங்களைப் பார்த்த அனுபவங்களில் இருந்தும், அவரது பன்மொழியிலான வாசிப்பில் இருந்தும் மேற்புலத்தில் உலக யுத்தங்களிற்குப் பின்னர் தோற்றம் பெற்ற நவவேட்கைவாதம் உள்ளிட்ட மாற்றரங்குகள் பற்றிய 'அரங்கியல் கட்டுரைகளை' தொண்ணூறுகளில் 'கலைமுகம்' சஞ்சிகையில் தொடர்ச்சியாக எழுதினார். அக்கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் (1939-2021). ஈழத்தின் நிராகரிக்கமுடியாத கலை ஆளுமைகளில் ஒருவர். அரை நூற்றாண்டிற்கும் மேலாக கலை இலக்கியத்துறைகளோடும் சமூகப்பணிகளோடும் தன்னைக் கரைத்துக்கொண்டவர். திருமறைக் கலாமன்றம் என்ற கலாசார நிறுவனத்தினை உருவாக்கி அதனூடாக நாடுதழுவியும் நாடுகடந்தும் பணியாற்றியவர்.

ஈழத்திலே யுத்தம் கொழுந்துவிட்டெரிந்த காலம் முதலாக கலையினூடாக தமிழ் இனத்தின் துயரங்களை உலகறியச் செய்ததுடன் துயருற்ற மக்களுக்கான கலைவழி ஆற்றுப்படுத்தலையும் செய்தவர். ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியவர், அறுபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை நெறிப்படுத்தியவர். 'வார்த்தைகளற்ற நாடகம்' என்ற வகைமையை உருவாக்கி அந்த வகைமையில் 'அசோகா', 'தர்சனா', 'புறம்', 'ஒமேகா', போன்ற பல நாடகங்களை உருவாக்கியவர். எமது மரபுவழிக் கலைகள் பேணப்படுவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தவர். பல்வேறு ஆய்வு நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் பல்வேறு மொழிகளில் எழுதியவர். தனது முதல் கலாநிதிப்பட்டத்தினை வரலாற்றுத்துறையில் லண்டன் பல்கலைக்கழகத்திலும், இரண்டாவது கலாநிதிப் பட்டத்திற்காக சைவ சித்தாந்தத்தினை தெரிவுசெய்து ஜேர்மன் மொழியிலே பசாவு பல்கலைக்கழகத்திலும் எழுதி ஆய்வு செய்தவர்.

உலகப் புகழ்பெற்றதான திருப்பாடுகளின் நாடக மரபினை தமிழுக்குரியதாக மாற்றி தமிழ் முகங்கொடுத்து வருடந்தோறும் பிரமாண்டமாக மேடையேற்றி வந்ததுடன் சர்வதேச தரத்தில் அதன் கலைத்துவத்தினை உயர்த்தி நிற்பவர். நாடக ஆசிரியர், நெறியாளர், ஆய்வாளர், பன்மொழி அறிஞர், பேச்சாளன், மெய்யியல் துறையில் பேராசிரியர், கவிஞர் என பன்முக ஆளுமைகளைக் கொண்டவர். நீ.மரிய சேவியர் ஆவார்.

# ஆரோக்கியமான வாழ்வினால் நவீன யுகத்தை வெல்வோம்



8

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பார்கள். ஒருமனிதனுடைய வாழ்வில் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய, வெற்றியை நோக்கிச் செல்லும் பயணம் மற்றும் அமைதியான வாழ்வு அனைத்தையுமே அழித்துவிடும் சக்தி படைத்ததாக ஆரோக்கியம் இருக்கிறது. இங்கு இரண்டு விதமான ஆரோக்கியம் முக்கியம் பெறுகின்றது. அவை உடல், உள ஆரோக்கியமாகும். . நாணயத்திற்கு இரு பக்கங்களுக்கும் பெறுமதியளிப்பது போல், இவ்விரு ஆரோக்கியங்களும் இணைந்து வெற்றிக்குப் பெறுமதி கொடுக்கின்றன.

மிகவும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இவ்வுலகில் பலர் எங்களுடைய உடலைப் பற்றி பொருட்படுத்துவதே இல்லை. ஒரு நோய் வந்ததன் பின்புதான் அதைப் பற்றி நாம் யோசிப்பதுண்டு. அதன் பின்பு அதனை நாம் சரிசெய்த முனைகிறோம். நாம் எப்போதும் எமது உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருந்தால் தான், வெற்றியை அடைவதற்கு உடலினுடைய முழுமையான பங்களிப்பு இருக்கும். அமைதியோடு, மகிழ்ச்சியாக எதனையும் மேற்கொள்ளமுடியும்.

எனவே, நாங்கள் மன ஆரோக்கியத்தோடு, மகிழ்ச்சியோடு இருந்தால்,மனதளவில் அவர்களுக்கு ஆதரவளிக்கவும் அவர்களுக்குத் துணையாக இருக்கவும், அவர்களை அன்பு செய்யவும், பரிவோடு அவர்களை அணுகவும் வழியேற்படும் என்பது உண்மையே. மனிதன் இயங்குவதற்கு உயிர்தேவை. உயிர் இயங்குவதற்கு ஆரோக்கியம் தேவை. ஒரு மனிதனால் எதனையும் சாதிக்க முடியும் என்பதை பற்றி எண்ணாது எப்போதும் துன்பத்திலும், தோல்வியிலும் துவள்வதற்கு உடலாலும், உள்ளத்தாலும் தயாராகி விடுகின்றோம். எனவே உடல், உள ஆரோக்கியத்தினைச் சிறப்பாகப் பேணி மகிழ்வான வாழ்வை உருவாக்கி வெற்றிக்காற்றை சுவாசிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்கனவே...

பில் கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

'2023ஆம் ஆண்டில் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த உள்ளாட்சி சபைகளுக்கான தேர்தலில் பொறுப்பேற்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்களை மீளப்பெறல் மற்றும் புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்கான ஏற்பாடுகளை வகுப்பதற்காக உள்ளாட்சிமன்ற அதிகாரசபைத் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதுதொடர்பாக சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில், 2023ஆம் ஆண்டில் பொறுப்பேற்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்களை இரத்துச் செய்து புதிய நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டு உள்ளாட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டுமென உடன்பாடு எட்டப்பட்டது.

அதற்கமைய, அனைத்து வாக்காளர்களின் வாக்குரிமை மற்றும் இளைஞர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் உரிமையைப் பாதுகாப்பதற்காக தற்போது பொறுப்பேற்கப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுப் பத்திரங்களை மீளப் பெறுவதற்கும், புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்குமான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-44)

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ.4

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கிறிஸ்தவ மன்றம் நடத்தும் ஒளிவிழா கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் கலா சாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில்பிரதமவிருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி கிறிஸ்தவ பாட விரிவுரையாளர் அ. ஜேம்ஸ் மெய்ஷான், விருந்தினராக யாழ். மறை மாவட்ட மறைக் கல்வி நடுவநிலைய இயக்குநர் அருட்பணி டியூக் வின்சென்ட் அடிகளார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-45)


## ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின்
ஆண்டுப்பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்
**13.12.2024 கண்டிவீதி, யாழ்ப்பாணம்**
**கலைத்தூது மண்டபத்தில் முற்பகல் 10 . 00 மணிக்கு**
**இடம்பெறவுள்ளது.**

இயங்குநிலை அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ளவும்.

**வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்.**

(cr.43820) (N-1)

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
### 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் (வரைவு) பொது மக்கள் பார்வைக்கு

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட வரைவு பொது மக்கள் பார்வைக்காக 2024.12.04 இலிருந்து 2024.12.10 ஆம் திகதி வரை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் சபையினது நூலகங்களான ஓமந்தை பொது நூலகம், கூமாங்குளம் பொது நூலகம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் வருமானங்கள், செலவினங்கள் சம்பந்தமான விடயங்களும் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் இருப்பின் செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளம் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ 2024.12.11 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்க முடியும் என்பதை அறியத்தருகிறேன்.

**வரைவு வரவு செலவுத்திட்ட சுருக்க அறிக்கை**

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| சபையின் சொந்த வருமானம் | 56,932,964.00 | |
| நன்கொடைகள் மற்றும் மீள்நிரம்பல்கள் | 73,936,540.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | | 130,869,504.00 |
| **செலவினம்** | | |
| மீண்டெழும் செலவினம் | 115,018,540.00 | |
| மூலதன செலவினம் | 15,850,300.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | | 130,868,840.00 |

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**

(cr 43822 (N.1)

## பெறுகை அறிவித்தல்
### புதுக்குடியிருப்பு பிரதேசசபை முல்லைத்தீவு
### தனியார் பாதுகாப்புச் சேவை 2025

1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அட்டவணையில் விவரிக்கப்பட்ட சேவைக்காக கேள்வி கோரப்படுகின்றது.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, முல்லைத்தீவு** தொலைபேசி:-021-2291024 தொலைநகல்: 0212061640 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 17.12.2024 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, முல்லைத்தீவிலிருந்து** 04.12.2024ம் திகதியிலிருந்து 17.12.2024ம் திகதிவரை வேலை நாட்களில் **காலை 09.00 மணிக்கும் மாலை 02.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
4. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 17.12.2024ம் திகதி **மாலை 03.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் இவ் வேலைக்குரிய கேள்வி அடையாள இலக்கத்தினை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கமுடியும்.
6. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பெறுகைக் குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஆளணி விபரம் | | ஒப்பந்தகாலம் | பிணை வைப்பு | பிணை வைப்பு செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகல் | இரவு | | | |
| 1 | *NP/14/04/PTKPS/Sec/PC/2025* | பாதுகாப்பு சேவை | 01 | 01 | 01 வருடம் | 10,000.00 | 15.01.2025 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி பெறுகைக் குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, முல்லைத்தீவு.**
**04.12.2024**

## இதய அஞ்சலி

### அமரர் அ.செந்தில்குமரேசன்

(பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர்-வலிவடக்குபிரிவு) எம் சக பதிவானது மறைவு அதிர்ச்சியும் வேதனையுமளிக்கிறது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

Dr.ஜெ.ஜெயலன்
மருத்துவபதிவாளர் (பிறப்பு,இறப்பு)
யாழ்.போதனா வைத்தியசாலை
சித்த ஆயுள்வேத வைத்தியர்
சுஜீவா வைத்தியசாலை.

## நினைவுகளின் அஞ்சலிகள்

மறைந்த லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் வைத்தியர்களான அமரர்களான Dr.செ.செல்வமகேந்திரன், Dr.து.குலசிங்கம், Dr.க.சுகந்தினி, Dr.பொ.சண்முகரட்ணம், Dr.அ.பரஞ்சோதிநாதர், மாணவி ப.தாமரா, மற்றும் கிருபா லேர்ணஸ் கிருபாகரன் ஆகியோரின் மறைவுகள் வேதனையைத் தருகின்றது இவர்களிற்கு எமது அஞ்சலிகளை தெரிவித்து அவர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

**Dr.ஜெ.ஜெயலன், Dr.திருமதி ச.ஜெயலன்**
**சித்த ஆயுள்வேத வைத்தியர்கள்**
**சுஜீவா வைத்தியசாலை, நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 03 . 1938



மறைவு 03 . 12 . 2024

### மரியநாயகம் மரியம்மா

மிருசுவில்லைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், அளவெட்டி, கொழும்புத்துறையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் மரியம்மா அவர்கள் நேற்று (03.12.2024) செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தமியாம்பிள்ளை-சவீனம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜேக்கப்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜேக்கப் மரியநாயகத்தின் அன்பு மனைவியும் சின்னத்துரை இராணி துரைதவம், தமியாம்பிள்ளை சின்னராசா காலஞ்சென்ற அரியநாயகம் திரேசம்மாவின் அன்புச் சகோதரியும், சின்னராசா ஜஸ்வரியம், அருட்சகோதரி மேரிபொஸ்கோ, அருட்சகோதரி மேரிகென்றியல் காலஞ்சென்ற அருள்தந்தை ஜேக்கப் திருச்செல்வம், அருள்தந்தை ஜேக்கப் நீக்கிலஸ் அவர்களின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற ம.அன்ரன் யோசப், பிரான்சிஸ், பீற்றர் மரியநாயகி, யேசுதாசன், காலஞ்சென்ற அற்புத நாயகியின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.12.2024) புதன்கிழமை கொழும்புத்துறையில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து மாலை 3.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ்.புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**36, சுவாவியார் வீதி**
**கொழும்புத்துறை**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 271 9470**

(CS 1973) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 29 . 05 . 1960



மறைவு 01 . 12 . 2024

எமது பத்திரிகை விற்பனை முகவர்

## அன்னலிங்கம் செந்தில்குமரேசன்

(செந்தில்)

(V.T.கந்தையா ஸ்ரோர்ஸ் - உரிமையாளர்)


அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் குழுமத் தலைவரும், பணியாளர்களும்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 04 . 1944



மறைவு 23 . 11 . 2024

## சந்திரசேகரம்பிள்ளை திலகேந்திரா

(பிராந்திய கணக்காளர் இ.போ.சபை)

யாழ். தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம்பிள்ளை திலகேந்திரா அவர்கள் 23-11-2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை - முத்துரத்தினம் தம்பதியரின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற தம்பையா - சரச்சந்திராகாந்தி தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தகாந்திஅம்மாள் அவர்களின் பாசமிகு கணவரும், துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா), லக்ஷ்யாணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹேமா, திருப்பதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவதரன், தர்சிகா, தரணிகா (லண்டன்), பவித்திரன் (அவுஸ்திரேலியா), சந்தோஸ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும், கோபால், இந்தி, அம்பி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04.12.2024) புதன்கிழமை முற்பகல் 9.00 - 11.00 மணியளவில் லண்டனில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்வதற்காக Holders Hill Rd, London Nw7 INB, UK என்னும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

துஷ்யந்தன் - மகன் - +61 414 911 109
லக்ஷ்யாணி - மகள் - +44 783 768 3754
கோபால் - மைத்துனர் - +44 796 088 9339

(CS/56812) J-1

## காய்ச்சலால் ஒருவர் பலி

யாழ்., டிசெ. 4

தொடர்ச்சியாக மூன்று நாள்கள் நிலவிய காய்ச்சல் காரணமாக குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கெருடாவில் தெற்கு, மண்டபக் காடு பகுதியைச் சேர்ந்த கனகன் சண்முகம் (வயது - 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.


பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் நேற்றுமுன்தினம் காலை சேர்க்கப்பட்ட அவர், அன்று பிற்பகலே சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை பதில் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார்.

(அ-ம-100)

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 02 . 1956



இறப்பு 02 . 12 . 2024

## கந்தையா சிவராசா

(ஓய்வுபெற்ற சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

கைதடி, நுணாவில் சவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (02.12.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற குமாரசாமி - கனகபூசனி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற குணபூசனியின் அன்புக் கணவரும், கவிசாலினி (லண்டன்), காலஞ்சென்ற ரகுலாதன் மற்றும் பிருந்தாயினி (Russion Street Hotel) அவர்களின் பாசமிகு தந்தையும், சிவரூபன் (லண்டன்), திலக்சன் (Commercial Bank Metchant Acquiring Unit) அவர்களின் அன்பு மாமனாரும், சுஜின், டெனிஷா, அபிதேவ், தேஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவஞானம் (Uthaya lodge - வெள்ளவத்தை), இராசமணி மற்றும் செல்வராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குற்றுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி,
நுணாவில்,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்
077 227 1843, 077 978 2625

(CR/43825) J-1

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம் : 02.10.1948 அஸ்தமனம் : 27.11.2022

பாலாவி தெற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் அருணாசலம் கந்தசாமி

(கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்)

**திதி: வளர்பிறை சதுர்த்தி**

கண்ணிமைக்கும் நொடிப்பொழுதில்
எம்மைவிட்டுப் பிரிந்த அப்பாவே!
ஊரே உங்களை பார்த்து மெய்சிலிர்த்த
வாழ்வு ஏனோ முடிந்து போனது
எப்படியும் வாழலாம் என்று இல்லாது
இப்படித்தான் வாழவேண்டும் என்று
வாழ்ந்துகாட்டிய அன்புத் தந்தையே!
ஈராண்டு பிரிந்து உங்கள் நினைவில்
வாழும் எங்களுக்கு ஆறுதல் எங்கே அப்பா?
ஆண்டவன் பொன்னடியில் ஆராத இன்பத்துடன் நீங்கள்
இருக்க என்றும் வேண்டுகின்றோம்.
**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cr.43826 (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07 . 06 . 1936

மறைவு
15 . 12 . 2023

அமரர்
## யோகரட்ணம் கனகசபாபதி

**திதி:** கார்த்திகை மாத வளர்பிறை திருதியை

நிறைவான வாழ்வுதனை வாழ்ந்தீர்கள்
நீங்கா நினைவுகள் என்றும் எம்மோடு இருக்கும்
மேலிருந்து மனமுவந்து எம்மை வழிநடத்தவே
என்றும் உங்களை வேண்டி நிற்கிறோம்
ஆண்டொன்று சட்டென்று கடந்து சென்றது
ஆண்டவனோடு அமைதியாய் உறைந்திருங்கள்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

குடும்பத்தினர்.

(CS/1970) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 01 . 1941



மறைவு
29 . 11 . 2024

## பொன்னுத்துரை லக்சுமி (பேபி)

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை லக்சுமி அவர்கள் கடந்த (29.11.2024) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தி உள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், முருகதாஸ் (இத்தாலி), சறோஜாதேவி (இலங்கை), வரலட்சுமி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனலட்சுமி (இத்தாலி), யோகேஸ்வரன் (இத்தாலி), காலஞ்சென்ற நந்தகுமார் ஆகியோரின் மாமியாரும், துஷா(இத்தாலி), டிலான் (இத்தாலி), சுபாங்கி - ஜானகா (இத்தாலி), தனுஷா - ராஜ்குமார் (கனடா), டினுஷன் (இத்தாலி), இந்துஷன் (இத்தாலி), அரிஷன் (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியும், கவிஸ் (இத்தாலி), கெவின் (இத்தாலி), அஸ்வின் (கனடா), அகன்னியா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல் :
குடும்பத்தினர்
074 068 0115, 021 205 2081

(CS/56822) J-1

# மரண அறிவித்தல்

## இளையதம்பி சிவகுமார்



மலர்வு
08.05.1958

உதிர்வு
02.12.2024

துரையன் தோட்டம், நெல்லியடி, கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், கரணவாய் மத்தி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவகுமார் அவர்கள் நேற்றுமுன்தினம் (02.12.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இலட்சுமி தம்பதியரின் இளைய புத்திரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், துவாரகன் (Software Engineer Singapore), அனுதர்சன் (Sri lanka Telecom Technician), கபிலாஷன் (Business Management), அஜந்தன் (Software Engineer Singapore), மருஷன் (Software Engineer) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவநீபா வின் மாமனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சயோதரனும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் திருமதி ஆனந்தராஜா ஆகியோரின் மைத்துனரும், மேனகா, சுமணா, உமாகாந்தன் ஆகியோரின் தாய் மாமனும், வித்தகன், பிரசன்னா, கிரிசாந், பிரசாந் ஆகியோரின் சிறிய தந்தையும், செல்வச்சந்திரன், யோகேஸ்வரி, சோதிமலர், சுபேந்திரன், பிரபாகரன், பிரபா ஆகியோரின் மைத்துனரும், குணசிங்கம், செந்தில்நாதன், செந்தில்நாதன் ஆகியோரின் சகலனும், தசாஜினி, சிவச்செல்வி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2024) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரின் பிறப்பிடமான துரையன் தோட்டம் நெல்லியடி வடக்கில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

துரையன் தோட்டம்,
நெல்லியடி வடக்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 612 5750
077 799 7867

(CR/43828) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமஷ்டிப்...

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற விவாதத்தில் சிறீதரன் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் மழுங்கடிக்கச் செய்யப்பட்டு ஆயுதமுனையில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டதாலேயே எமது இளைஞர்களால் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தமிழர்கள் நீண்ட போராட்ட வரலாற்றைக் கொண்ட ஓர் இனம்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரையில் நாடு தொடர்பில் பல விடயங்கள் கூறப்பட்டிருந்தாலும் இந்த நாட்டில் 80 வருடங்களுக்கு மேலாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினை தொடர்பில் அவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை என்பது ஒரு துரதிர்ஷ்டவசமான விடயமாகும். மிக முக்கியமான பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி எதுவுமே வெளிப்படுத்தாமை எமக்கு ஏமாற்றமளிக்கின்றது.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது தனது அக்கிராசன உரையிலும், இந்தியா சென்றிருந்த போது நாளிதழொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதும் தமிழர் பிரச்சினை தொடர்பிலும் பேசவில்லை. அவரின் இந்த தவிர்த்தல் நடவடிக்கை இந்த நாட்டில் அவரை அடையாளம் தெரியாமல் ஆக்கிவைத்தது. தேசிய மக்கள் சக்தியிடம் இன்று பெரும்பான்மைப் பலம் உள்ளது. விகிதாசார தேர்தல்முறைமையின்கீழ் அதிகூடிய ஆசனங்களை பெற்றகட்சி என்ற வகையில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்பை, ஆணையை மதிக்கின்றோம். சிங்கள சகோதரர்களின் உன்னதமான பங்கையும், இன்றைய மாற்றங்களையும் நாம் உள்வாங்க விரும்புகின்றோம்.

நாங்கள் இரத்தமும், சதையுமாக கண்ணீருடன் வாழ்ந்த இனம். சிங்கள சகோதரர்களால் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட யுத்தத்தால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்ட ஓர் இனம். இந்த நிலையிலும்கூட உங்களோடு எங்களது கரங்களைச் சேர்த்துப் பயணிக்க விரும்புகின்றோம்.

உங்களது அந்தப் பலமான மாற்றங்களோடு தமிழ் மக்கள் தங்களுக்கான மாற்றங்களை நோக்கி நகரவும் தயாராக இருக்கின்றோம். நாங்கள் எதற்கும் எதிராளிகள் அல்லர். இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் பல பேச்சுகளை நடத்தியுள்ளோம். உன்னதமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டன. மேலும் சில ஒப்பந்தங்கள் கிடப்பில் போடப்பட்டன.

இன்று மாற்றம் வந்துள்ளது. எதையும் செய்யக்கூடிய வல்லமையுடன் தேசிய மக்கள் சக்தி வந்துள்ளது. தீர்வை நோக்கிப் பயணிப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம். எமது சமாதானக் கதவுகள் திறந்தே உள்ளன. சிங்கள மக்களுக்குரிய இன, மத, மொழி அடையாளங்களை நாம் மதிக்கின்றோம். அதேபோல எமக்குரிய உரிமைகள், அடையாளங்கள், பண்பாடுகள், நில உரிமை என்பன பாதுகாக்கப்பட வேண்டும்.

சமரசம் என்பது நீங்களும், நாங்களும் கைகுலுக்கிக் கொள்வது அல்ல. இனத் தனித்துவங்களை மதித்து நடப்பதுதான் உங்களுக்கும், எங்களுக்குமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தும். சிங்கள மக்களும், தமிழ் பேசும் மக்களும் இலங்கைத் தீவின் இணை உரிமையாளர்கள், இணைப் பங்காளர்கள் என்ற மனப்பாங்குடன் ஒரு புதிய அரசியலை அணுக அரசாங்கம் தயாராக வேண்டும் - என்றார். (அ-ம-44)

## அடக்குமுறைகளை...

வாதத் தடைச்சட்டத்தின் கீழ் அநுர அரசாங்கம் மேற்கொள்ளும் கைதுகளை சஜித் கண்டித்துள்ளார்.

சஜித் மேலும் தெரிவித்ததாவது:-

'பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. எனினும், அந்தச் சட்டம் தற்போது அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தச் சட்டத்தை பயன்படுத்தி கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் பிரஜைகளுக்குள்ள சுதந்திரம் என்பன இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்தி ஊடகங்களை வேட்டையாட முற்படுவது நியாயமா? தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு சமூக ஊடகங்கள் பெரிதும் பங்களித்தன. எனினும், சமூகஊடகச்செயற்பாட்டாளர்கள் வேட்டையாடப்படுகின்றனர். சொல்வதைச் செய்யும் அரசாங்கமாக இருந்தால் பயங்கரவாதத்தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் அடக்குமுறை நிறுத்தப்பட வேண்டும் - என்றார். (அ-ம-44)

## 60 வயது...


நடத்தப்படவுள்ளது என்ற விடயம் தெரியப்படுத்தப்படாமலேயே, அவருக்கு விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பெப்ரவரியிலும் அவர் விசாரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-100-66)

## பாம்பு...

என்பவரே உயிரிழந்துள்ளார். உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள வயலில் தனது மாட்டை மேய்ச்சலுக்காகக் கட்டியபோது குறித்த முதியவரைப் பாம்பு தீண்டியுள்ளது. இதையடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே நேற்றுமுன்தினம் இரவு சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். (அ-ம-66)

# மரண அறிவித்தல்

## அமரர் பெரியதம்பி சண்முகநாதன் (சித்தா)



தாய் மடியில்
28.07.1955

தம்பிரான் கழலடியில்
27.12.2024

அமரர் பெரியதம்பி சண்முகநாதன் கடந்த (27.11.2024) புதன்கிழமை சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட பெரியதம்பிரான் திருவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பெரியதம்பி-சிதம்பரநாச்சியார் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற திரு.திருமதி கந்தப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் அழகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற விசுவநாதன், காலஞ்சென்ற தெய்வநாயகி, ஜெயமணி, முத்துலட்சுமி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மகாலிங்கம், காலஞ்சென்ற பொன்.தெய்வேந்திரன், வேதவனம், நாகேஸ்வரி, முருகரட்ணம், வேலுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் அன்ரன் ஜெயராயன், பரமேஸ்வரி, கௌரி ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற சசிகுமார், எழிலரசி, கலையரசி, உதயகுமார், ஜெயக்குமார், புஸ்பஜெய்சி, புஸ்பவதி, புஸ்பகாந்தி, கோபி, கிருஷாந்தன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் இரவீந்திரன், இந்துமதி, இரவிச்சந்திரன், வளர்மதி, பானுமதி, ஜெயராணி, காலஞ்சென்ற கௌரி மனோகரி, சிவரூபன், யதூசன், ஜனனி, யாழினி, யாமினி, கவிதா, குமரன் ஆகியோரின் மாமனும் தினேஷ், கிருஷிகா, பிரசன்னா, பிரதீப், பிரவீனா, கௌசிகன், கௌசல்யா,கௌதமி, சரண்யா, சந்தோஷ், சாரங்கன், விஷ்வா, விதுசா, விஷ்ணு, சுருதி, கிருத்திக், அறிவுமாறன், சிந்துர்க்கா, காலஞ்சென்ற சிவதுர்க்கா, மாதுமை, சேயோன், மேவன், வர்மன்,ரிஷி, ஹிரிஸ், ஹசினி, அஸ்மிதா, அஸ்வின், டோனியல், மாயா, இனியா, கபிசன், கஜானி, கபிஷ், அகிரா, ஜெய்தன்,ஜென்சன், சஞ்சய், கேரன் ஆகியோரின் அன்புப் பேரனும் திஷானி, திஷாந்த், தாரா, தியானா, யஸ்வின், யஸ்வந்த், யஸ்விகா, மகிமா, மானசா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2024 புதன்கிழமை (பிரான்ஸ் நேரப்படி) முற்பகல் 09.00 மணியளவில் பிரான்ஸ் வில்தனஸ் மயானத்தில் நடைபெற்று பிற்பகல் 01.30 மனிக்கு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
0033665151234 (ரவி மருமகன்)
0033666816550 (நித்தினம் மைத்துனர்)

தகவல்:
குடும்பத்தினர்

(CR 43830) P-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுணாவில் பொதுநூலகத்தினுள் வைத்து பசுமாட்டை இறைச்சியாக்கிய கொடூரம்

பசுமாட்டைத் திருடி சாவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொதுநூலகத்தில் வைத்து இறைச்சியாக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் பொதுநூலக ஊழியர் உட்பட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை நுணாவில் பொது நூலகத்துக்கு அருகிலுள்ள காணியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட பசுமாடு காணாமல் போயுள்ளது.

பசுவின் உரிமையாளரும் அந்தப் பகுதி இளைஞர்களும் தேடுதல் நடத்தியபோது நூலக மதிலுக்கு அருகில் பசுமாட்டின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதையடுத்து நூலகத்துக்குள் நுழைந்து பார்த்தபொழுது நூலக குளியலறைக்குள் வைத்து பசுவை இறைச்சியாக்கிய இரத்தக்கறைகள் காணப்பட்டுள்ளன.

அதனையடுத்து அங்கிருந்த அலுவலரை விசாரித்தபோது, இன்னொருவருடன் இணைந்து பசுவை இறைச்சியாக்கியதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். இருவரையும் இளைஞர்கள் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் அவர்களைக் கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உதயனின் முதலாம் திகதிய பதிப்பில், நகரசபை வாளகத்துக்குள் வைத்து மாடு இறைச்சியாக்கப்பட்டதாகத் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாடு இறைச்சியாக்கப்பட்ட இடம் நகரசபையின் நுணாவில் பொதுநூலகத்தில் என்பதே சரியானது. (ச–100)

## கலைவிழாவும் கௌரவிப்பும்

“லிட்டில் மாஸ்டர்ஸ் ஆங்கிலமொழிமூல பாலர் பாடசாலையின் கலைவிழாவும், மாணவர் கௌரவிப்பும் சமாதான நீதவான் கி.சதீஸ்குமார் தலைமையில் நாச்சிமார் கோவில் காமாட்சி மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தமிழ் மொழிபெயர்ப்பு கற்கைகள்துறை விரிவுரையாளர் கலாநிதி ச.க.கண்ணதாஸ், யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியை திருமதி. தி. கண்ணதாஸ், சிறப்புவிருந்தினர்களாக சிவஸ்ரீ.இ.ஜெயவிரு பாட்ஷன் குருக்கள், வடமாகாண திறைசேரி அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சுகுணேந்திரன், பளை மத்திய கல்லூரி பிரதி அதிபர் திருமதி.சு.சுகுணேந்திரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை திருமதி. ந.விமலினி, கிளி. மாசார் அ.த.க. பாடசாலை ஆசிரியை கா.மந்தாகினி, மன்.ஆண்டான்குளம் ரோ.க. தமிழ் மகாவித்தியாலய ஆசிரியை செல்வி.நா.நதியா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (25)


## மணமகள் தேவை

யாழ். இந்து, (V) கௌரவ குடும்பம், 1984, சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த தற்போது பிரான்ஸில் வசிக்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 597 1757

(CS/56821) J-1

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்நகருக்கு அருகாமையில் தனி வீடு வாடகைக்கு தேவை.

077 751 4285


## மணமகள் தேவை

இலண்டனை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட 56 வயதான மணமகனுக்கு மணமகள் தேவை.

06.12.2024 வரை - 074 328 5717 என்ற இலக்கத்திற்கும் 08.12.2024 இற்குப்பின் 447985275844 என்ற இலக்கத்திற்கு Whatsapp ஊடாகவும் தொடர்புகொள்ளவும்.


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 03 . 09 . 1936



மறைவு 29 . 11 . 2024

**ஆசிர்வாதம் பிரான்சிஸ் (செல்வராசா)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மிருசுவில். பிரான்ஸ் மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் பிரான்சிஸ் (செல்வராசா) அவர்கள் 29.11.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் மாகிறேற் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற வெலிச்சோர் மாகிறேற் மரியம்மா தம்பதிகளின் மருமகனும் மேரி றோசலின் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்புக் கணவரும் சென். ஜோர்ச் (பிரான்ஸ்) மேரி மரீனா (நோர்வே) சென். எடின்பரோ (சுவிஸ்) அன்ரன் கெனடி (சுவிஸ்) மேரி மெற்றில்டா (ஜேர்மனி) தோமஸ் எடிசன் (விரிவுரையாளர். ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம். யாழ்ப்பாணம்) டென்சலீனா (பிரான்ஸ்) டிக்சன் (பிரான்ஸ்) அல்வீனஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி (பிரான்ஸ்) அன்ரனி பத்மராஜா (நோர்வே). மேரி ஜெலா (சுவிஸ்) மேரி (சுவிஸ்) மகேந்திரன் (ஜேர்மனி) ஜெனிஸ்ரெலா (அதிபர். யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்) உதயாகரன் (பிரான்ஸ்) ஒலிவற் தாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் கஸ்தூலப்பர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 05.12.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
F.T எடிசன் - மகன்
076 208 8883
இல. 01. சென். பற்றிக்ஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

(CS 1971) P-1

## கண்ணீர் அஞ்சலி

### அன்னலிங்கம் செந்தில்குமரேசன் (செந்தில்)



யாழ்ப்பாணம் தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் வலிவடக்கு இறப்பு, பிறப்பு மற்றும் விவாக பதிவாளரும் தாவடி ஸ்ரீஅம்பலவாண வேதவிநாயகர் ஆலயபரிபாலன சபை தலைவரும் V.T.கந்தையா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான

**அன்னலிங்கம் செந்தில்குமரேசன் (செந்தில்)**

அவர்கள் கடந்த 01.12.2024ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு பற்றுவதோடு அவரின் ஆன்மா ஸ்ரீஅம்பலவாணவேத விநாயகரின் பாதார விந்தங்களில் அமைதிகாண வேண்டுவதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர்வு 29.05.1960 உதிர்வு 01.12.2024

Northway Family Mart.

(CR/43829) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.